# தூய லூர்து அன்னை ஆலயம்

50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com

22~10~2017 பொதுக்காலம் 29ம் ஞாயிறு முதல் ஆண்டு



## மறை பரப்பு ஞாயிறு

இன்று எடுக்கப்படும் காணிக்கை, மறைபரப்பு பணிக்காக அனுப்பப்படும். தாராள உள்ளத்தோடு உதவிடும் படியாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

## விவிலியப் பகிர்வுக் குழு நற்கருணை ஆராதனை

நாள்: 05~11~2017, ஞாயிறு

நேரம் : காலை 11:30 மணி

இடம் : புனித பெர்னதெத்து அறை

பங்கேற்று இறை ஆசீர் பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## நற்கருணை ஆராதனை வழிபாடு





நாள் : 05~11~2017, ஞாயிறு

நேரம் : மாலை 5:00 மணி

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

# சிந்தனை

அன்புடையீர்,

இறைஇயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்! பொதுக்காலத்தின் 29ஆம் ஞாயிறுத் திருப்பலி விருந்தில் பங்கேற்க வந்துள்ள இறைமக்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம்.

அவரவருக்கு உரியது அவரவருக்குக் கொடுக்கப்பட்டால் இந்த மண்ணகம் விண்ணகமாக மாறிவிடும் என்பது உறுதி. ஆனால், அவரவருக்கு உரியது அவரவருக்குக் கிடைக்காமல் இருப்பதால்தான் உலகம் சிறிது சிறிதாக நரகமாக மாறி வருகிறதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

'சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்' என்ற புகழ் பெற்ற வரிகளை இன்றைய நற்செய்தியின் இறுதியில் சொல்கிறார் இயேசு. விவிலியத்தைத் தாண்டி, கிறிஸ்தவ மறையைத் தாண்டி, பொருளாதாரம், அரசியல் என்ற பலச் சூழல்களில் மேற்கோளாகப் பயன்படுத்தப்படும் ஒரு புகழ்பெற்ற வாக்கியம் இது. இயேசு கூறிய அந்தப் புகழ் மிக்கக் கூற்றையும், அவர் அப்படிச் சொன்ன சம்பவத்தின் பின்னணியையும், இன்றைய ஞாயிறு சிந்திக்க அழைக்கின்றது.

மதமும் அரசியலும் கலந்த அன்றைய வரலாறு இன்றும் தொடர்கிறது. இந்தச் சூழலில், நமக்கு இன்று இயேசு கூறும் இந்த வார்த்தைகள் மிகவும் தெளிவாக ஒலிக்கின்றன. சீசருக்குரியதை, இந்த உலகிற்குரியதை நாம் வழங்கித் தான் ஆக வேண்டும். ஆனால், அத்துடன் நம் வாழ்வு, கடமை எல்லாம் முடிந்து விடுவதில்லை. சீசரையும், இவ்வுலகையும் தாண்டிய இறைவன் இருக்கிறார், அவருக்கு உரியதையும் நாம் வழங்க வேண்டும் என்று இயேசு நம்மிடம் இன்று கேட்கிறார். நம் பதில் என்ன? அதற்கான பதிலை இன்றைய திருப்பலியில் தேடுவோம்.வாரீர்!




## ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி



தேதி : இன்று, 22-10-2017

நேரம் : மதியம் 2.30மணி

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்.

## புனிதர் அனைவர் திருவிழா திருப்பலி

**31 - 10 - 2017, செவ்வாய்**

ஆங்கிலததில் : மாலை 6.30 மணி

**01 - 11 - 2017, புதன்**

ஆங்கிலததில் : மதியம் 12.30 மணி

: மாலை 6.30 மணி

தமிழ் : மாலை 8.00 மணி

## இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவுத் திருப்பலி



**02 - 11 - 2017, வியாழன்**

ஆங்கிலததில் : மதியம் 12.30 மணி மற்றும் மாலை 6.30 மணி

தமிழ் : மாலை 8.00 மணி

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | வ | இ | லு | ம் | ர் | ழு | லி | லு | ம் |
| லை | ட | ஆ | டை | ட | வ | வ | ஆ | பு | யு |
| க் | து | ம் | சு | வி | ய | ம் | ட | சு | ழி |
| க | ரு | ரு | ளு | க | டா | ய் | பு | ண் | க |
| ல் | வ | ளி | நே | ரு | வு | து | ஸ் | நே | ஆ |
| லு | ம் | ஒ | கோ | ழி | அ | க | ண் | கோ | ற் |
| நெ | ல் | ரு | பொ | நெ | ரு | மை | ரு | ண | ற |
| டு | க | ப் | பா | ப் | ம | மு | தி | த் | லை |
| நா | ரு | மா | ங் | கா | ண | வி | ரு | யு | யு |
| தி | க | ண் | க | மா | ட் | சி | யை | யு | ம் |

1. நானே _________ வேறு எவருமில்லை.
2. உலகில் _________ சுடர்களாகத் துலங்குவீர்கள்.
3. உங்களுக்கு _________, _________ உரித்தாகுக!
4. சைரசுக்கு ஆண்டவர் _________ செய்துள்ளார்.
5. _________, _________ ஆண்டவருக்குச் சாற்றுங்கள்.
6. _________ உங்களை நினைத்து என்றும் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம்.

***********

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசாயா 45:1,4-6 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 96:1,3.4-5.7-8.9-10ac |
| பதிலுரை: | மாட்சியையும் ஆற்றலையும் ஆண்டவருக்குச் சாற்றுங்கள். |
| இரண்டாம் வாசகம்: | 1 தெசலோனிக்கர் 1:1-5a |
| வாழ்த்தொலி: | அல்லேலூயா! அல்லேலூயா! வாழ்வின் வார்த்தையைப் பற்றிக்கொள்ளுங்கள். உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள். அல்லேலூயா. |
| நற்செய்தி வாசகம்: | மத்தேயு 22:15-21 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை(ஆங்கிலம்) | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு | : சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**